# புண்ணியம் மிகும் புனித துஆக்கள்.

## (மூலமும் பொருளும்)

தொகுத்தவர்:-

**மௌலவி அப்ஸலுல் உலமா**
**M. ரபீக் அஹ்மது உலவிய்யு &**
**பாஜில் பாகவி (M.A.)**
பேராசிரியர் மஹ்றலறா அரபிக் கல்லூரி &
சென்ட்ரல் மேல் நிலைப்பள்ளி
**காயல்பட்டணம்**
வ.உ.சி. மாவட்டம்.

வெளியீடு :-

**என்.எம்.ஆர். பதிப்பகம்**
**"நைனார் மன்ஜில்"**
30. AG/3, கீழ நைனார் தெரு.
காயல்பட்டணம்.
628 204

முதல் பதிப்பு 1991
இரண்டாம் பதிப்பு 199

# முகவுரை

இறையருளால் 'புண்ணியம் மிகும் புனித துஆக்கள்' எனும் தலைப்பில் இச்சிறிய நூலை வெளியிட்டுள்ளேன். இந்நூலில் மூலமும் பொருளும் இடம்பெற்றுள்ளன. எல்லோரும் இதை ஓதி , பயன்பெறுவதற்காக பல சிரமங்களுக்குமத்தியில் இந்நூலை வெளியாக்கியுள்ளேன். புனிதரமலான் மாதத்திலும், மற்ற மாதங்களிலும் தேவையான முக்கியமான பல துஆக்களை எழுதியிருக்கின்றேன். துஆக்கள் மனிதர்கள் அனைவருக்கும் மிகமுக்கியமானது. ஏனெனில், துஆவைப்பற்றி அல்லாஹ் திருமறையில், "என்னிடம் கேளுங்கள் நான் உங்களுக்கு பதிலளிக்கிறேன்" என கூறியுள்ளான். மேலும், துஆவின் சிறப்பைப்பற்றி பெருமானார் (ஸல்) துஆ என்பது வணக்கத்திற்கு மூளை போன்று மிக முக்கியமானதாகும் என கூறியுள்ளார்கள்.

எனவே, இதை ஓதுகின்ற பெருமக்கள் பயன்பெறுவதுடன் ஏதேனும் குறைகாணின் நிறைமனதுடன் தெரிவிப்பதுடன் எனது ஹக்கிலும் எனது குடும்பத்தார் ஹக்கிலும் துஆ செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வஸ்ஸலாம்.

# அர்ப்பணம்

இளமை பருவத்தில் இறையடி சேர்ந்த அன்பிற்கும் பாசத்திற்குமுரிய எனது பெரிய தங்கைக்கு இந்நூலை அர்ப்பணம் செய்கிறேன்.

இவண்,
நூலாசிரியர்.

மஹ்லறத்துல் காதிரிய்யா அரபிகல்லூரி முதல்வர்மௌலானா .மௌலவி அல்ஹாஜ் S.N. சாகிப்தம்பி ஆலிம்மஹ்லரி அவர்களும், உதவி முதல்வர் மௌலானா மௌலவி அல்ஹாஜ் S.S. கலந்தர் மஸ்தான் ஆலிம் ரஹ்மானி அவர்களும் வழங்கிய

## —— வாழ்த்துரை ——

மௌலவி அப்ஸலுல் உலமா M. ரபீக்அஹ்மது ஆலிம் பாஜில் பாகவி அவர்கள் அபூர்வமான பல துஆக்களை தேர்ந்து மூலத்துடன் மொழி பெயர்ப்பும் இணைத்து 'புண்ணியம் மிகும் புனித துஆக்கள்' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதுபோன்ற பலனுள்ள பல நூல்களை அவர்கள் வெளியிடப் பிரார்த்திப்பதுடன் இத்தகு நற்பணிகளுக்கு ஊக்கமளிக்குமாறு சமுதாய மக்களை கேட்டுக்கொள்கிறோம்.

வஸ்ஸலாம் ,

இவண்,

S.N. சாகிப்தம்பிமஹ்லரி

S.S. கலந்தர் மஸ்தான் ரஹ்மானி

2 - 2 - 1991.

காயல்பட்டணம்.

# புனித ரமலான் மாதம் ஒவ்வொரு நாளும் ஓதும் துஆவும் அதன் பொருளும்

1) முதலாம் நாள்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ اَلصَّلَاةُ وَالسَّلَامُ

عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ

اَللّٰهُمَّ اجْعَلْ صِيَامِيْ صِيَامَ الصَّائِمِيْنَ وَقِيَامِيْ قِيَامَ

الْقَآئِمِيْنَ وَنَبِّهْنِيْ عَنْ نَوْمَةِ الْغَافِلِيْنَ يَا اِلٰهَ الْعٰلَمِيْنَ

وَيَا خَيْرَ النَّاصِرِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ النَّاصِرِيْنَ

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக. அவனின் கருணையும் சாந்தியும் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தார் தோழர்கள் அனைவர்கள் மீதும் உரித்தாகுக.

இறைவா ! (யா அல்லாஹ்) உனது கிருபையின் பொருட்டால் எனது நோன்புகளை (உண்மையாக) நோன்பு நோற்றவர்களின் நோன்புகளாக ஆக்குவாயாக ! எனது தொழுகையை (உண்மையாக) தொழக்கூடியவர்களின் தொழுகையாக ஆக்குவாயாக ! உன்னை மறந்தவர்களின் தூக்கத்தைவிட்டும் என்னை உற்சாகப்படுத்துவாயாக ! உலகத்தாரின் இறைவனே ! உதவி செய்பவர்களில் சிறந்தவனே! உதவி செய்பவர்களில் மிக கிருபையுள்ளவனே!

**2) இரண்டாம் நாள் :-**

اَللّٰهُمَّ قَرِّبْنِيْ اِلٰى مَرْضَاتِكَ وَجَنِّبْنِيْ مِنْ سَخَطِكَ
وَنَقِمَتِكَ وَوَفِّقْنِيْ لِقِرَاءَةِ اٰيَاتِكَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ
الرَّاحِمِيْنَ

இறைவா ! (யா அல்லாஹ்) உனது கிருபையின் பொருட்டால் உனது திருப்தியின்பால் என்னை நெருக்கமாக்குவாயாக ! உனது கோபத்தை விட்டும், தாபத்தை விட்டும் என்னை தூர மாக்குவாயாக ! இரக்கமுள்ளவர்களில் மிக இரக்க முள்ளவனே ! உனது புனித திருமறை வசனங்களை ஓதுவதற்கு எனக்கு நல்லுதவி செய்வாயாக !

**3) மூன்றாம் நாள் :-**

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ فِيْهِ الذِّهْنَ وَالتَّنْبِيْهَ وَاَبْعِدْنِيْ
مِنَ السَّفَاهَةِ وَالتَّمْوِيْهِ وَاجْعَلْ لِّيْ نَصِيْبًا مِّنْ كُلِّ
خَيْرٍ تُنْزِلُ فِيْهِ بِجُوْدِكَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! (யா அல்லாஹ்) உனது கிருபையாலும் உனது கொடையாலும் இந் நாளில் எனக்கு நல்ல உள்ளத்தையும் புத்துணர்வையும் எனக்கு அருள்வாயாக! மடமையை விட்டும் வெளி அலங்காரத்தை விட்டும் என்னை தூரமாக்குவாயாக! கிருபையுள்ளவர்களில் மிக கிருபையுள்ளவனே ! இந்நாளில் இறங்கும் எல்லா நன்மைகளினின்றும் எனது பங்கை எனக்கு ஆக்குவாயாக !

4) நான்காம் நாள் :-

اَللّٰهُمَّ قَوِّنِي فِيْهِ لِاِقَامَةِ اَمْرِكَ وَاَذِقْنِي فِيْهِ
حَلَاوَةَ ذِكْرِكَ وَاَوْزِعْنِي فِيْهِ لِاَدَاءِ شُكْرِكَ بِكَرَمِكَ
يَا خَيْرَ النَّاصِرِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! (யா அல்லாஹ்) உனது கிருபையாலும் உனது அருட் கொடையினாலும் உனது ஏவலை நிலை நாட்டுவதற்கும் இந்நாளில் எனக்கு ஆற்றல் வழங்குவாயாக! உன்னை தியானிக்கும் இன்பத்தையும் இந்நாளில் எனக்கு அருள்வாயாக! உனக்கு நன்றி செலுத்துவதற்கு உனது கொடையின் பொருட்டால் இந்நாளில் எனக்கு வசதியளிப்பாயாக! உதவியாளர்களில் மிக நல்லவனே! கிருபையுள்ளவர்களில் மிக கிருபை யுள்ளவனே!

5) ஐந்தாம் நாள் :-

اَللّٰهُمَّ اجْعَلْنِي فِيْهِ مِنَ الْمُسْتَغْفِرِيْنَ وَاجْعَلْنِي فِيْهِ
مِنْ عِبَادِكَ الصّٰلِحِيْنَ الْقَانِتِيْنَ وَاجْعَلْنِي مِنْ اَوْلِيَائِكَ
الْمُتَّقِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! (யா அல்லாஹ்) உனது கிருபையால் என்னை இந்நாளில் மன்னிப்பு தேடியவர்களினின்றும் ஆக்குவாயாக! மேலும் இந்நாளில் உன்னை நின்று வணங்கிய உனது நல்லடியார்களில் நின்றும் ஆக்குவாயாக! மேலும் உன்னை அஞ்சிய உனது நேசர்களில் நின்றும் என்னை ஆக்குவாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையுள்ளவனே!

6) ஆறாம் நாள் :-

اللهم لا تخذلني فيه بتعرض معصيتك ولا تضربني فيه بسياط نقمتك وزحزحني فيه من موجبات سخطك بمنك يا منتهى رغبة الراغبين برحمتك يا أرحم الراحمين

இறைவா ! (யா அல்லாஹ்) உனது கிருபையாலும், உனது உதவியினுலும், உனக்கு பாவத்தை செய்வதால் இந்நாளில் என்னை இழிவாக்கிவிடாதே ! இந்நாளில் உனது கோபத்தின் சாட்டைகளினுல் என்னை அடித்து விடாதே ! இந்நாளில் உனது கோபத்தினுல் ஏற்படும் (பயங்கரமான) விஷயங்களை விட்டும் என்னை தூரமாக்குவாயாக ! ஆவலுள்ளவர்களின் ஆவலின் இறுதியே! கிருபையாளர்களில் மிக கிருபையாளனே!

7) ஏழாம்நாள் :-

اللهم أعني على صيامه وقيامه وجنبني فيه من هفواته وآثامه بتوفيقك يا هادي المؤمنين برحمتك يا أرحم الراحمين

இறைவா ! (யா அல்லாஹ்) உனது கிருபையால் இந்நாளில் நோன்பு நோற்பதற்கும், நின்று உன்னை வணங்குவதற்கும், உதவி செய்வாயாக! முஃமீன்களின் வழிகாட்டியே ! உனது நல்லுதவியினால் இந்நாளில் பாவங்கள் பழிகளைவிட்டும் என்னை தூரமாக்குவாயாக ! கிருடையாளர்களில் மிக கிருபையாளனே!

8) எட்டாம்நாள் :-

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ فِيْهِ صُحْبَةَ الْكِرَامِ وَاجْنُبْنِيْ مُحَادَثَةَ الْاِخْوَانِ اللِّئَامِ بِطَوْلِكَ يَامَلْجَأَ الْاٰمِلِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா ! (யா அல்லாஹ்) உனது கிருபையால் இந்நாளில் எனக்கு சங்கையானவர்களின் நட்பை அருள்வாயாக ! மன எண்ணங்களின் ஒதுங்குமிடமே ! உனது கொடையின் பொருட்டால் அற்ப சகோதரர்களினால் (ஏற்படும்) ஆபத்துகளை விட்டும் என்னை தூரமாக்குவாயாக!

9) ஒன்பதாம் நாள் :-

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ فِيْهِ مِنْ رَحْمَتِكَ الْوَاسِعَةِ وَاهْدِنِيْ فِيْهِ لِبَرَاهِيْنِكَ السَّاطِعَةِ وَخُذْ بِنَاصِيَتِيْ اِلٰى مَرْضَاتِكَ الْجَامِعَةِ بِمَحَبَّتِكَ يَا اَمَلَ الْمُشْتَاقِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா ! (யா அல்லாஹ்) உனது கிருபையால் விரிந்த உனது கிருபையினின்றும் இந்நாளில் எனக்கு அருள்வாயாக ! இந்நாளில் ஆதாரங்களுக்கு எனக்கு நேர்வழி காட்டுவாயாக! உன்னை ஆசை வைக்கக்கூடியவர்களின் எண்ணமே ! உனது பிரியத்தால் உனது ஒன்று சேர்ந்த திருப்தியின்பால் எனது நெற்றி ரோமத்தை பிடிப்பாயாக ! கிருபையாளர்களில் மிக கிருபையாளனே !

10) பத்தாம் நாள் :-

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ الْمُتَوَكِّلِيْنَ عَلَيْكَ وَاجْعَلْنِيْ
مِنَ الْفَائِزِيْنَ لَدَيْكَ وَاجْعَلْنِيْ مِنَ الْمُقَرَّبِيْنَ اِلَيْكَ
بِاِحْسَانِكَ يَاغَايَةَ الطَّالِبِيْنَ

இறைவா ! (யா அல்லாஹ்) உனது நல்லுதவியால் என்னை பொறுப்புக்களை ஒப்படைத்தவர்களில் நின்றும் ஆக்குவாயாக! மேலும், உன்னிடத்தில் வெற்றிபெற்றவர்களில் நின்றும் என்னை ஆக்குவாயாக ! உன்னின் பால் நெருங்கியவர்களில் நின்றும் என்னை ஆக்குவாயாக ! (உன்னை) தேடக்கூடியவர்களின் இறுதியே !

11) பதினொன்றாவது நாள் :-

اَللّٰهُمَّ حَبِّبْ اِلَيَّ فِيْهِ الْاِحْسَانَ وَكَرِّهْ اِلَيَّ فِيْهِ
الْعِصْيَانَ وَحَرِّمْ فِيْهِ نَفْسِيْ عَلَى السَّخَطِ وَالنِّيْرَانِ
بِغَوْثِكَ يَاغَوْثَ الْمُسْتَغِيْثِيْنَ

இறைவா ! (யா அல்லாஹ்) உனது இரட்சிப்பினால் இந்நாளில் (உன்னைதூய எண்ணத்துடன்) வணங்க எனக்கு பிரியத்தை ஏற்படுத்துவாயாக ! மேலும் இந்நாளில் உனக்கு மாறு செய்வதை எனக்கு வெறுப்பாக்கி வைப்பாயாக ! மேலும் இந்நாளில் எனது ஆத்மாவை (உனது) கோபத்தின் மீதும் நரகத்தின் மீதும் தடையாக்கி வைப்பாயாக ! இரட்சிப்பு தேடுபவர்களின் இரட்சிப்பே !

12) பன்னிரண்டாவது நாள்:-

اَللّٰهُمَّ زَيِّنِّي فِيهِ بِالسِّتْرِ وَالْعَفَافِ وَاسْتُرْنِي فِيهِ
بِلِبَاسِ الْقُنُوعِ وَالْكَفَافِ وَحَلِّنِي فِيهِ بِحُلَّةِ الْفَضْلِ
وَالْإِحْسَانِ بِعِصْمَتِكَ يَا عِصْمَةَ الْخَائِفِينَ

இறைவா! (யா அல்லாஹ்) உனது பாதுகாப்பினால் இந்நாளில் பத்தினித் தன்மையைக் கொண்டும் எனது குறையை அழிப்பதைக் கொண்டும் என்னை அலங்கரிப்பாயாக! மேலும் இந்நாளில் போதுமெனும், (தன்னை) தடுத்துக் கொள்வதெனும் ஆடையைக் கொண்டு என்னை மறைப்பாயாக! மேலும், உபகாரம், கொடை என்ற ஆபரணத்தைக் கொண்டு எனக்கு ஆபரணம் அணிவிப்பாயாக! (உன்னை) பயந்தவர்களின் பாதுகாப்பே!

13) பதிமூன்றாவது நாள்:-

اَللّٰهُمَّ طَهِّرْنِي فِيهِ مِنَ الدَّنَسِ وَالْأَقْذَارِ وَصَبِّرْنِي
عَلَى كَائِنَاتِ الْأَقْدَارِ وَوَفِّقْنِي فِيهِ لِلتُّقٰى وَصُحْبَةِ
الْأَبْرَارِ بِقُوَّتِكَ يَا قُوَّةَ الْمَسَاكِينِ

இறைவா! (யா அல்லாஹ்) உனது வல்லமையின் பொருட்டினால் இந்நாளில் என்னை அழுக்காறுகளை விட்டும் தூய்மையாக்குவாயாக! என்னை ஆற்றல்களின் உள்ளமைகள் மீது மாற்றுவாயாக! மேலும் இந்நாளில் உன்னை அஞ்சி நடப்பதற்கும் நல்லவர்களின் நட்பிற்கும் எனக்கு நல்லுதவி செய்வாயாக! ஏழைகளின் வல்லமையே!

14) பதினான்காவது நாள்:-

اَللّٰهُمَّ لَا تُؤَاخِذْنِيْ فِيْهِ بِالْعَثَرَاتِ وَاَقِلْنِيْ فِيْهِ
اَلْخَطَايَا وَالْهَفَوَاتِ وَلَا تَجْعَلْنِيْ عَرَضًا لِلْبَلَايَا
وَالْاٰفَاتِ بِعِزَّتِكَ يَا عِزَّ الْمَسْكِيْنِ اٰمِيْنَ

இறைவா! (யாஅல்லாஹ்) உனது கண்ணியத்தின் பொருட்டால் இந்நாளில் என்னை தவறுகளைக் கொண்டு பிடித்து விடாதே! மேலும் இந்நாளில் என்னுடைய குற்றங்களையும் தவறுகளையும் நீக்குவாயாக! என்னை சோதனைகளு[illegible] ஆபத்துகளுக்கும் இலக்காக ஆக்கிவிடாதே! ஏழையின் க[illegible]ியமே! ஏற்றுக் கொள்வாயாக!

15) பதினைந்தாவது நாள்:-

اَللّٰهُمَّ ارْزُقْنِيْ فِيْهِ طَاعَةَ الْخَاضِعِيْنَ وَامْلَأْ
فِيْهِ قَلْبِيْ خُشُوْعَ الْخَاشِعِيْنَ وَاشْعُرْ فِيْهِ صَدْرِيْ
لِاِنَابَةِ الْمُخْبِتِيْنَ بِمَنِّكَ يَا اَمَانَ الْخَائِفِيْنَ

இறைவா! (யாஅல்லாஹ்) உனது உதவியின் பொருட்டால் இந்நாளில் (உன்னை) பணிந்தவர்களின் வழிப்பாட்டை எனக்கு அருள்வாயாக! மேலும் இந்நாளில் எனது உள்ளத்தில் உள்ளச்சம் உடையவர்களின் அச்சத்தை நிரப்புவாயாக! மேலும் இந்நாளில் எனது உள்ளத்திற்கு பணிவுடையவர்களின் இறைமீட்சிக்கு உணர்வு கொடுப்பாயாக!

16) பதினாறாவது நாள்:-

اَللّٰهُمَّ وَفِّقْنِيْ فِيْهِ بِعَمَلِ الْاَبْرَارِ وَجَنِّبْنِيْ
مُوَافَقَةَ الْاَشْرَارِ وَاٰوِنِيْ اِلٰى رَحْمَتِكَ فِيْ دَارِ الْقَرَارِ
بِاِلٰهِيَّتِكَ يَا اِلٰهَ الْاَوَّلِيْنَ وَالْاٰخِرِيْنَ

இறைவா! (யாஅல்லாஹ்) உனது தெய்வீகத்தன்மையின் பொருட்டால் இந்நாளில் எனக்கு நல்லவர்களின் அமலை (கிரியையை)க் கொண்டு நல்லுதவி செய்வாயாக! மேலும் கெட்டவர்களின் கூட்டை விட்டும் என்னை அகற்றுவாயாக! நிரந்தர வீடாகிய (மறுமையில்) உனது கிருபையின் பால் என்னை ஒதுங்கச் செய்வாயாக! முன்னோர் பின்னோர் யாவரின் இறைவனே!

17) பதினேழாவது நாள்:-

اَللّٰهُمَّ اهْدِنِيْ فِيْهِ لِصَالِحِ الْاَعْمَالِ وَاقْضِ لِيْ فِيْهِ
الْحَوَائِجَ وَالْاٰمَالَ يَا مَنْ لَا يَحْتَاجُ اِلَى الْبَيَانِ وَالتَّفْسِيْرِ
وَالسُّؤَالِ يَا عَالِمًا بِمَا فِيْ صُدُوْرِ الْعٰلَمِيْنَ بِرَحْمَتِكَ
يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! (யாஅல்லாஹ்) உனது கிருபையால் இந்நாளில் நல்ல அமல்கள் செய்வதற்கு எனக்கு நேர்வழி காட்டுவாயாக! உலகத்தாரின் உள்ளங்களிலுள்ள விஷயங்களை அறிபவனே! விளக்குவதற்கும், தெளிவு படுத்துவதற்கும் தேவையற்றவனே! இந்நாளில் தேவைகளையும் ஆசைகளையும் எனக்கு நிறைவேற்றி வைப்பாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையாளனே!

18) பதினெட்டாவது நாள்:-

اَللّٰهُمَّ نَبِّهْنِيْ فِيْهِ لِبَرَكَاتِ اَسْحَارِهٖ وَنَوِّرْ قَلْبِيْ
بِضِيَاۤءِ اَنْوَارِهٖ وَخُذْ بِكُلِّ اَعْضَاۤئِيْ اِلٰى اتِّبَاعِ
اٰثَارِهٖ بِنُوْرِكَ يَا نُوْرَ قُلُوْبِ الْعَارِفِيْنَ بِرَحْمَتِكَ
يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! (யாஅல்லாஹ்) உனது ஒளியின் பொருட்டால் இந்நாளில் அதன்ஸஹர் நேரத்தின் அபிவிருத்திகளுக்காக எனக்கு உணர்வூட்டுவாயாக! மேலும் எனது உள்ளத்தை அதன் பிரகாசங்ளினால் ஒளிமயமாக்குவாயாக! உன்னை அறியக்கூடியவர்களின் உள்ளங்களின் ஒளியே! எனது உறுப்புக்கள் அனைத்தையும் அதன் தன்மைகளை பின்பற்றுவதன் பால் பிடித்துக் கொள்வாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையாளனே!

19) பத்தொன்பதாவது நாள் :-

اَللّٰهُمَّ وَفِّرْ حَظِّيْ مِنْ بَرَكَاتِهٖ وَسَهِّلْ سَبِيْلِيْ اِلٰى
خَيْرَاتِهٖ وَلَا تَحْرِمْنِيْ قَلِيْلًا مِّنْ حَسَنَاتِهٖ يَا هَادِيًا
اِلَى الْحَقِّ الْمُبِيْنِ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! (யா அல்லாஹ், பகிரங்கமான உண்மையின் பால் நேர் வழிகாட்டுபவனே! இந்நாளின் அபிவிருத்திகளில் நின்றும் எனக்கு நஸீபை அதிகமாக்குவாயாக! அதன் நன்மைகளின் பால் எனது பாதையை எளிதாக்குவாயாக! அதன் நன்மைகளில் நின்றும் கொஞ்சத்தையும் எனக்கு தடை செய்துவிடாதே! கிருபையாளர்களில் மிககிருபையாளனே!

20) இருபதாவது நாள்:-

اَللّٰهُمَّ افْتَحْ لِيْ اَبْوَابَ الْجِنَانِ وَاَغْلِقْ عَلَيَّ اَبْوَابَ
النِّيْرَانِ وَوَفِّقْنِيْ فِيْهِ لِتِلَاوَةِ الْقُرْاٰنِ يَامُنْزِلَ السَّكِيْنَةِ
فِيْ قُلُوْبِ الْمُؤْمِنِيْنَ

முஃமீன்களின் உள்ளங்களில் அமைதியை அளிப்பவனே! எனக்கு சுவனங்களின் வாயில்களை திறப்பாயாக! நரகங்களின் வாயில்களை எனக்கு மூடி விடுவாயாக! புனித இறைமறையை ஓதுவதற்கு எனக்கு நல்லுதவி செய்வாயாக!

21) இருபத்தி ஒன்றாவது நாள்:-

اَللّٰهُمَّ اجْعَلْ لِّيْ اِلٰى مَرْضَاتِكَ دَلِيْلًا وَلَا تَجْعَلْ
عَلَيَّ لِلشَّيْطَانِ سَبِيْلًا وَاجْعَلِ الْجَنَّةَ لِيْ مَنْزِلًا
وَمَقِيْلًا يَاقَاضِيَ حَوَائِجِ الطَّالِبِيْنَ اٰمِيْنَ

இறைவா! (யா அல்லாஹ்) தேடுபவர்களின் தேட்டங்களை நிறைவேற்றுபவனே! எனக்கு உனது திருப்தியின் பால் ஆதாரத்தை ஆக்குவாயாக! எனக்கு பாதகமாக ஷைத்தானுக்கு சாதகமாக பாதையை ஆக்கிவிடாதே! எனக்கு சுவனத்தை தங்குமிடமாகவும் தூங்குமிடமாகவும் ஆக்குவாயாக! ஆமீன்.

22) இருபத்திரண்டாவது நாள்:-

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيَّ اَبْوَابَ فَضْلِكَ وَاَنْزِلْ عَلَيَّ فِيْهِ
مِنْ بَرَكَاتِكَ وَوَفِّقْنِيْ لِمُوْجِبَاتِ مَرْضَاتِكَ وَاَسْكِنِّيْ
فِيْهِ بِبَرَكَتِهِ بُحْبُوْحَاتِ جَنَّاتِكَ يَامُجِيْبَ دَعْوَةِ الْمُضْطَرِّيْنَ

யாஅல்லாஹ்! இக்கட்டில் சிக்கிக் கொண்டவர்களின் அழைப்பிற்கு பதிலளிப்பவனே! உனது சிறப்பின் வாயில்களை எனக்கு திறப்பாயாக! இந்நாளில் என் மீது உனது அபிவிருத்திகளில் நின்றும் சொரிவாயாக! உனது பொருத்தத்தை ஏற்படுத்தும் காரியங்களுக்கு நல்லுதவி செய்வாயாக! மேலும், இந் நாளில் அதன் அபிவிருத்திகளினால் உனது சுவனங்களின் நல்(வாசனைகளை)க் கொண்டு என்னை வாழச் செய்வாயாக! ஆமீன்.

23) இருபத்தி மூன்றாவது நாள்:-

اَللّٰهُمَّ اغْسِلْنِيْ فِيْهِ مِنَ الذُّنُوْبِ وَطَهِّرْنِيْ فِيْهِ
مِنَ الْعُيُوْبِ وَامْتَحِنْ فِيْهِ قَلْبِيْ لِتَقْوَى الْقُلُوْبِ
يَا مُقِيْلَ عَثَرَاتِ الْمُذْنِبِيْنَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

யா அல்லாஹ்! பாவிகளின் குற்றங்களை அகற்றுபவனே! இந்நாளில் பாவங்களை விட்டும் என்னை கழுவி தூய்மைப் படுத்துவாயாக! மேலும் இந்நாளில் குறைகளை விட்டும் என்னை தூய்மைப்படுத்துவாயாக! மேலும் இந்நாளில் உள்ளங்களின் இறையச்சத்திற்கு எனது உள்ளத்தை தேர்ந்தெடுப்பாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையாளனே!

24) இருபத்திநான்காவது நாள்:-

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ فِيْهِ مَا يُرْضِيْكَ وَاَعُوْذُ بِكَ
مِمَّا يُؤْذِيْكَ بِاَنْ اُطِيْعَكَ وَلَا اَعْصِيَكَ يَا عَالِمًا
بِاَحْوَالِ السَّائِلِيْنَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

யாஅல்லாஹ்! கேட்பவர்களின் நிலைகளை அறிந்தவனே! இந்நாளில் உனக்கு திருப்தியை ஏற்படுத்தும் காரியங்களை உன்னிடம் கேட்கிறேன். உனக்கு மாறு செய்யாமல் வழிபடுவதைக் கொண்டு உனக்கு வேதனையூட்டும் காரியங்களை விட்டும் உன்னைக் கொண்டு நான் பாதுகாவல் தேடுகிறேன். கிருபையாளர்களில் மிக கிருபையாளனே!

25) இருபத்தைந்தாவது நாள்:-

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مُحِبًّا لِاَوْلِيَآئِكَ وَمُعَادِيًا لِاَعْدَآئِكَ وَمُتَمَسِّكًا بِسُنَّةِ خَاتَمِ اَنْبِيَآئِكَ يَاعِصْمَةَ قُلُوْبِ النَّبِيِّيْنَ اٰمِيْنَ ه

யாஅல்லாஹ்! நபிமார்களின் உள்ளங்களை காப்பவனே! என்னை உனது நேசர்களை பிரியம் வைப்பவனாகவும் உனது விரோதிகளை வெறுப்பவனாகவும் உனது இறுதி நபிமுஹம்மது(ஸல்) அவர்களின் வழிமுறையை பற்றிப் படிக்கக் கூடியவனாகவும் ஆக்குவாயாக! ஆமீன்

26) இருபத்தி ஆறாம் நாள்:-

اَللّٰهُمَّ اجْعَلْ فِيْهِ سَعْيِيْ مَشْكُوْرًا وَّذَنْبِيْ مَغْفُوْرًا وَعَيْبِيْ مَسْتُوْرًا يَاسَامِعَ اَصْوَاتِ الْمُبْتَهِلِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ،

யா அல்லாஹ்! உனக்கு அடிபணியக்கூடியவர்களின் குரல்களை கேட்பவனே (ஏற்றுக்கொள்பவனே)! உனது கிருபையின் பொருட்டால் இந்நாளில் எனது முயற்சியை நன்றியுள்ளதாகவும், எனது பாவத்தை மன்னிக்கப்பட்டதாகவும், எனது குறையை மறைக்கப்பட்டதாகவும் ஆக்குவாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையுள்ளவனே!

27) இருபத்தி ஏழாம் நாள்:-

اَللّٰهُمَّ وَفِّرْ حَظِّي فِيْهِ مِنَ النَّوَافِلِ وَاَكْرِمْنِي بِاِحْضَارِ الْمَسَائِلِ وَقَرِّبْ فِيْهِ وَسِيْلَتِي اِلَيْكَ مِنْ بَيْنِ الْوَسَائِلِ يَا مَنْ لَا يَشْغَلُهُ اِلْحَاحُ الْمُلِحِّيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ۔

யா அல்லாஹ்! நிர்பந்திப்பவரின் நிர்பந்தம் சோர்வடையச் செய்யாதவனே! உனது கிருபையின் பொருட்டால் இந்நாளில் சுன்னத்தான வணக்கங்களில் நின்றும் எனது பங்கை அதிகாரிக்கச் செய்வாயாக! மேலும் தேவைகளும் வேண்டுதல்களும் வெற்றியடைவதன்மூலமும் பல துணைச் சாதனங்களுக்கு மத்தியில் உன் பால் எனக்குரிய துணைச் சாதனத்தை நெருக்கமாக்குவதன்மூலமும் என்னை சங்கை செய்வாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையுள்ளவனே!

28) இருபத்தி எட்டாவது நாள்:-

اَللّٰهُمَّ غَشِّنِي فِيْهِ بِالرَّحْمَةِ وَارْزُقْنِي فِيْهِ التَّوْفِيْقَ وَالْعِصْمَةَ وَطَهِّرْ قَلْبِي مِنْ غَيَابَاتِ التُّهْمَةِ يَا رَحِيْمًا بِعِبَادِهِ الْمُؤْمِنِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

யாஅல்லாஹ்! தனது முஃமினான தனது அடியார்களுக்கு கிருபையுள்ளவனே! உனது கிருபையின் பொருட்டால் இந்நாளில் (பாவத்தை விட்டும்) பாதுகாப்பையும் (நல்லமல் செய்வதற்கு) நல்லுதவியையும் அருள்வாயாக! மேலும் எனது உள்ளத்தை (உன்) கிருபையை குறைபடுத்துவதை விட்டும் சுத்தப்படுத்துவாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையுள்ளவனே!

29) இருபத்தி ஒன்பதாம் நாள்:-

اَللّٰهُمَّ ارْزُقْنِىْ فِيْهِ لَيْلَةَ الْقَدْرِ وَصَيِّرْ فِيْ كُلَّ اُمُوْرِيْ مِنَ الْعُسْرِ اِلَى الْيُسْرِ وَاقْبَلْ مَعَاذِيْرِيْ وَحُطَّ عَنِّى الْوِزْرَ يَا رَؤُفًا بِعِبَادِهِ الْمُؤْمِنِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ۝

யா அல்லாஹ்! தனது முஃமினான அடியார்களுக்கு இரக்கம் காட்டுபவனே! உனது கிருபையின் பொருட்டால் இந்நாளில் எனக்கு புனித (லைலதுல்) கத்ர் இரவை அருள்வாயாக! எனது அனைத்து காரியங்களையும் கஷ்டத்தில் இருந்து இலகுவின் பக்கம் மாற்றுவாயாக! என்னுடைய பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வாயாக! என்னை விட்டும் பாவத்தை அகற்றுவாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையாளனே!

30) முப்பதாவது நாள்:

اَللّٰهُمَّ اجْعَلْ صِيَامِيْ بِالشُّكْرِ وَالْقَبُوْلِ عَلٰى مَا تَرْضَاهُ وَيَرْضَاهُ الرَّسُوْلُ مُحْكَمَةً فُرُوْعُهُ بِالْاُصُوْلِ بِحَقِّ مُحَمَّدٍ وَّاٰلِهِ الطَّيِّبِيْنَ الطَّاهِرِيْنَ الَّذِيْنَ قَضَوْا بِالْحَقِّ وَبِهٖ يَعْدِلُوْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ اٰمِيْن ۝

யாஅல்லாஹ்! உனது கிருபையால் (உனதுதூதர்) முஹம்மது(ஸல்) அவர்களின் பொருட்டாலும் சத்தியத்தைக் கொண்டு தீர்ப்பு செய்து அதைக் கொண்டு நீதமாக நடந்த பரிசுத்தமான மணமான அவர்கள் குடும்பத்தாரின் பொருட்டாலும் நீ திருப்தி கொள்கின்ற பிரகாரமும் உனது தூதர் தனது சட்டத்தைக் கொண்டும் அவர்களை சேர்வதைக் கொண்டு அவர்களின் கிளைகளைக் கொண்டும் திருப்தி கொள்கின்ற பிரகாரமும் எனது நோன்புகளை நன்றிக் கடனாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் ஆக்குவாயாக! கிருபையாளர்களில் மிக கிருபையுள்ளவனே! ஏற்றுக் கொள்வாயாகா!

ஆமீன்.

## தஹஜ்ஜுத் தொழுகையின் துஆ

إِلٰهِىْ نَامَتِ الْعُيُوْنُ وَاسْتَرَاحَتِ الْجُفُوْنُ يَامَنْ
لَا تَأْخُذُهٗ سِنَةٌ وَّلَا نَوْمٌ وَيَامَنْ لَا يُشْغِلُهٗ
شَأْنٌ عَنْ شَأْنٍ، وَلَمْ يَغْلِتْهُ فِلْتَةٌ نَاظِرٍ
وَّلَا لِفْتَةُ خَاطِرٍ اِغْفِرْلِيْ وَارْحَمْنِيْ اِلٰهِىْ قَدْ
اَغْلَقَتِ الْمُلُوْكُ اَبْوَابَهَا وَاَقَامَتْ عَلَيْهَا حُرَّاسَهَا
وَحُجَّابَهَا، وَبَابُكَ مَفْتُوْحٌ لِلسَّآئِلِيْنَ فَهَا اَنَا
فِيْ بِبَابِكَ يَا اَللّٰهُ رَبِّ اِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ
فَاغْفِرْلِيْ رَبِّ اغْفِرْ وَارْحَمْ وَاَنْتَ خَيْرُ
الرَّاحِمِيْنَ،

என்னுடைய நாயனே! கண்கள் தூங்கிவிட்டன. இமைகள் ஓய்வு பெற்றுள்ளன. சிறுதூக்கமோ ஆழ்ந்த தூக்கமோ பீடிக்காதவனே! ஒரு வேலைக்காக மற்றொரு வேலையின் கவனத்தை விட்டும் திரும்பி விடப்படாதவனே! எவனுடைய கண் சிமிட்டுதலும், மன ஊசலாட்டமும் தன்னை விட்டும் தப்பி விடாதவனே! என்னை நீ மன்னித்து எனக்கு கிருபை செய்வாயாக! என்னுடைய நாயனே! அரசாங்கங்கள் தம்முடைய வாசல்களை அடைத்து அவ்வாசல்களின் மீது பாதுகாவலர்களையும் ஏற்படுத்தியுள்ளன. ஆனால் உன்னுடைய வாசலோ கேட்பவர்களுக்குத் திறந்ததாகவே இருக்கிறது. இதோ தேவையுள்ள நான் உன்னுடைய வாசலில் நிற்கிறேன் யா அல்லாஹ்! ஒரு மிஸ்கீன் உன் வாசலில் நிற்கிறேன். யா அல்லாஹ்! என்னுடைய இரட்சகனே! நிச்சயமாக நான் எனக்கே அநியாயம் செய்துகொண்டேன். எனவே என்னை மன்னிப்பாயாக! என்னுடைய இரட்சகனே! மன்னித்துக் கிருபை செய்வாயாக! நீ கிருபை செய்வோரில் மிகச் சிறந்தவன்.

## 1-புனித ரமலான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் பகலிலும் 10 தடவை ஓதவும்

أَسْتَغْفِرُ اللّٰهَ الَّذِىْ لَا اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّوْمُ
مِنْ كُلِّ ذَنْبٍ وَخَطِيْئَةٍ وَاَتُوْبُ اِلَيْهِ وَهُوَ حَيٌّ دَائِمٌ
قَائِمٌ لَا يَفُوْتُ وَلَا يَمُوْتُ بِيَدِهِ الْمُلْكُ وَهُوَ
عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ١٠

என்றும் நிலையுள்ள, உயிருள்ளவனும் இருக்கின்ற அவனை தவிர உண்மையாக வணங்கப்படுகிற வேற எந்த இறைவனும் இல்லையே அத்தகைய அல்லாஹ்விடம் அனைத்து பாவங்கள் குற்றங்களை விட்டும் பாவமன்னிப்பு தேடுகிறேன். மேலும் அவனிடம் தவ்பா செய்கிறேன். மேலும் அவன் என்றும் உயிருள்ளவன் . நிரந்தரமானவன் நிலையுள்ளவன்-எந்த காரியமும் அவனை விட்டும் தப்பாது. அவன் மரணிக்கவே மாட்டான். அவனது கரத்திலே (உலகின்) அரசாட்சி இருக்கிறது. அவனே எல்லா காரியங்கள் மீதும் வல்லமை பெற்றவனாகும்.

## 2- ரமலான் மாதத்தில் ஒவ்வொரு பகலிலும் ஓதும் துஆ

اَللّٰهُمَّ إِنَّ هٰذَا شَهْرٌ مُّبَارَكٌ عَظَّمْتَ فِيْهِ قَدْرَ الْمُؤْمِنِيْنَ
فَعَظِّمْ بِقَدْرِهِمْ قَدْرِيْ ، وَشَرَحْتَ صُدُوْرَ الْعَارِفِيْنَ
فَاشْرَحْ بِبَرَكَتِهِمْ صَدْرِيْ

யா அல்லாஹ்! நிச்சயமாக இது பரக்கத்தான மாதமாகும். உனது கிருபையால் இம் மாதத்தில் முஃமீன்களின் அந்தஸ்தை கண்ணியப் படுத்தியுள்ளாய். எனவே அவர்களின் அந்தஸதின் பொருட்டால் எனது அந்தஸ்தையும் கண்ணியப்படுத்துவாயாக! இறையை அறிந்த (ஆரிபீன்களின்) உள்ளங்களை விரிவடையச் செய்தாய எனவே அவர்களின் பரக்கத்தினால் எனது உள்ளத்தை விரிவடையச் செய்வாயாக!

وَاَصْلَحْتَ اُمُوْرَ الصّٰلِحِيْنَ فَاَصْلِحْ بِحُرْمَتِهِمْ اَمْرِيْ
وَضَاعَفْتَ اُجُوْرَ الصَّائِمِيْنَ

நல்லோர்களின் காரியங்களை சீராக்கினாய். எனவே அவர்களின் சங்கையினால் எனது காரியத்தை சீராக்குவாயாக! நோன்பாளிகளின் கூலிகளை இரட்டிப்பாக்கியிருக்கின்றாய். எனவே அவர்களின் பொருட்டால் எனது கூலியை இரட்டிப்பாக ஆக்குவாயாக!

وَخَفَّفْتَ اَوْزَارَ التَّائِبِيْنَ فَخَفِّفْ بِشَفَاعَتِهِمْ وِزْرِيْ
وَرَفَعْتَ ذِكْرَ الْعَابِدِيْنَ فَارْفَعْ بِفَضْلِكَ ذِكْرِيْ

தவ்பா செய்பவர்களின் குற்றங்களை நீ இலேசாக்கினாய். எனவே அவர்களின் சிபாரிசினால் எனது குற்றத்தை இலேசாக்குவாயாக! உன்னை வணங்கக்கூடியவர்களின் கூற்றை (புகழை) உயர்வு படுத்தியுள்ளாய். எனவே உனது சிறப்பினால் எனது புகழை உயர்வுபடுத்துவாயாக!

وَزِدْتَ نِعْمَةَ الشَّاكِرِيْنَ فَاَوْزِعْنِيْ شُكْرِيْ
وَوَفَّرْتَ ثَوَابَ الصَّابِرِيْنَ فَثَبِّتْ بِهٖ عَلٰى قَضَآئِكَ صَبْرِيْ

உனக்கு நன்றி செலுத்துபவர்களின் அருளை அதிகரித்துள்ளாய். எனவே எனது நன்றியையும் விசாலமாக்குவாயாக! பொறுமையாளர்களின் தவாபை அதிகமாக்கி இருக்கிறாய். எனவே அதனால் உனது தீர்ப்பின் பிரகாரம் எனது பொறுமையை தரிபடுத்துவாயாக !

وَبَارَكْتَ فِيْ ذُخْرِ الْمُنْفِقِيْنَ فَاكْثِرْ بِرَحْمَتِكَ ذُخْرِيْ
وَتَوَلَّيْتَ نَصْرَ الْمُتَوَكِّلِيْنَ فَتَوَلَّ بِمَنْزِلَتِهِمْ نَصْرِيْ

உனக்காக செலவு செய்பவர்களின் சேமிப்பில் பரக்கத் செய்திருக்கிறாய். எனவே உனது கிருபையினால் எனது சேமிப்பை அதிகமாக்குவாயாக! உன்னிடம் எல்லா பொறுப்பையும் ஒப்படைக்கின்றவர்களுக்கு உதவி செய்வதை நீ பொறுப்பேற்றிருக்கின்றாய். எனவே அவர்களின் அந்தஸ்தின் பொருட்டால் எனது உதவியையும் நீ பொறுப்பேற்றுக் கொள்வாயாக!

وَشَدَدْتَ اِزَارَ الْمُوْقِنِيْنَ فَاشْدُدْ بِحَوْلِكَ اِزَارِيْ
وَيَسَّرْتَ عُسْرَ الْمُخْلِصِيْنَ فَيَسِّرْ بِجُوْدِكَ عُسْرِيْ

உன்னை உறுதி கொண்டோரின் ஆடையை நீ உறுதியாக்கியிருக்கிறாய். எனவே உனது ஆற்றலினால் எனது ஆடையையும் உறுதி ஆக்குவாயாக! உன்னை தூய மனத்துடன் வணங்கக்கூடியவர்களின் கஷ்டத்தை எளிதாக்கியிருக்கின்றாய், எனவே உனது அருட்கொடையினால் எனது கஷ்டத்தை எளிதாக்குவாயாக!

وَاحْفَظْ فِيهِ لِسَانِي ، وَاسْتُرْ لِي فِيهِ عَيْبِي
وَاغْفِرْ لِي فِيهِ ذَنْبِي وَاعْفُ عَنِّي فِيهِ وِزْرِي

மேலும் இப் புனித மாதத்தில் எனது நாவை (தீமையை விட்டும்) பாதுகாப்பாயாக! மேலும் இம் மாதத்தில் எனது குறையை எனக்கு மறைப்பாயாக! மேலும் இம் மாதத்தில் எனது பாவத்தை மன்னிப்பாயாக! மேலும் எனது குற்றத்தை இப்புனித மிகு மாதத்தில் அழிப்பாயாக!

وَاَعْتِقْنِي فِيهِ مِنْ نَارِكَ وَاَصْلِحْ لِي فِيهِ
اَمْرِي ، وَارْحَمْنِي بِرَحْمَتِكَ فِيهِ لِضَعْفِي ، وَاَكْرِمْنِي بِكَرَمِ
وَجْهِكَ وَجَلَالِكَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِينَ ،

மேலும் இப்புனித மாதத்தில் உனது நரக நெருப்பை விட்டும் என்னை விடுதலை செய்வாயாக! மேலும் இப் புனித மாதத்தில் எனது காரியத்தை சீராக்குவாயாக! மேலும் சங்கையான இம்மாதத்தில் எனது பலஹீனத்தால் எனக்கு கிருபை செய்வாயாக! உனது கீர்த்தியின் பொருட்டாலும் உனது சங்கையின் பொருட்டாலும் என்னை சங்கையாக்குவாயாக! கிருபையாளர்களில் மிகக் கிருபையாளனே! ஏற்றுக் கொள்வாயாக!

**ப) புனித ரமலான் மாதம் ஒவ்வொரு அஸருக்கு பின் 100 தடவை ஓதவும்**

اَسْتَغْفِرُ اللّٰهَ الَّذِي لَا اِلٰهَ اِلَّا هُوَ الْحَيُّ الْقَيُّومُ
ذَا الْجَلَالِ وَالْاِكْرَامِ غَفَّارَ الذُّنُوبِ وَاَتُوبُ اِلَيْهِ

கீர்த்தியும், கண்ணியமும் உடைய என்றும் நிலையான, என்றும் உயிருள்ள, உண்மையாக வணங்கப்படுவதற்கு உரித்தானவன் அவனன்றி வேறு யாருமில்லாத பாவங்களை அதிகமாக மன்னிக்கக்கூடிய அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருகிறேன். மேலும் தவ்பா செய்கிறேன்.

### 4. ரமலான் மாதம் இரவுகளில் ஓதும் துஆ

اَللّٰهُمَّ امْدُدْ لَنَا فِيْ اَعْمَارِنَا وَوَسِّعْ لَنَا فِيْ اَرْزَاقِنَا وَبَلِّغْنَا اٰمَالَنَا وَصَحِّحْ لَنَا اَجْسَامَنَا فَاِنَّكَ تَمْحُوْ مَا تَشَاۤءُ وَتُثْبِتُ وَعِنْدَكَ اُمُّ الْكِتَابِ

யா அல்லாஹ்! எங்கள் வாழ்நாட்களை எங்களுக்கு நீளமாக்குவாயாக! எங்கள் இரணத்தில் எங்களுக்கு விஸ்தீரணத்தை ஏற்படுத்துவாயாக! எங்கள் அபிலாஷைகளை எங்களுக்கு அடையச் செய்வாயாக! எங்கள் மேனிகளை எங்களுக்கு நலமாக்கி வைப்பாயாக! ஏனெனில் நிச்சயமாக நீ நாடியவைகளை அளிப்பாய். நாடியவைகளை தரிபடுத்துவாய். உன்னிடமே உம்முல்கிதாப் என்ற விதி ஏடு உள்ளது.

### 5. புனித ரமலான் மாதத்தின் முதல்பத்தில் ஓதும் துஆ.

اَللّٰهُمَّ ارْحَمْنِيْ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இறைவா! உனது கிருபையின் பொருட்டால் எனக்கு கிருபை செய்வாயாக! கிருபையாளர்களில் மிகக்

கிருபையாளனே!

6. இரண்டாவது பத்தில் ஓதும் துஆ.

اَللّٰهُمَّ اغْفِرْ لِيْ ذُنُوْبِيْ يَا رَبَّ الْعٰلَمِيْنَ

இறைவா! எனது பாவங்களை எனக்கு மன்னிப்பாயாக! உலகத்தாரின் இரட்சகனே!

7. மூன்றாவது பத்தில் ஓதும் துஆ.

اَللّٰهُمَّ اَعْتِقْنِيْ مِنَ النَّارِ وَاَدْخِلْنِي الْجَنَّةَ يَا رَبَّ الْعٰلَمِيْنَ

இறைவா! நரகத்தை விட்டும் எனக்கு விடுதலை அளித்து என்னை சுவனத்தில் நுழைய வைப்பாயாக! உலகத்தாரின் இரட்சகனே!

8. புனித ரமலான் மாதத்தின் பிந்திய 15 - நாட்களும் ஓதும் துஆ.

اَللّٰهُمَّ اِنَّكَ عَفُوٌّ كَرِيْمٌ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ
عَنِّيْ يَا كَرِيْمُ يَا رَحِيْمُ يَا اَللّٰهُ وَفَضْلًا مِّنَ اللّٰهِ
وَنِعْمَةً وَّمَغْفِرَةً وَّرَحْمَةً وَعَافِيَةً وَّسَلَامًا
اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ اَسْتَغْفِرُكَ اَللّٰهُمَّ اَسْئَلُكَ
الْجَنَّةَ وَاَعُوْذُ بِكَ مِنَ النَّارِ

இறைவா! நிச்சயமாக நீ மிக மன்னிப்பவனும்

சங்கையானவனுமாகும். நீ மன்னிப்பை விரும்புவாய் எனவே, அல்லாஹ்வே! கிருபையாளனே! சங்கையாளனே (நான்) அல்லாஹ்வினின்றும், சிறப்பையும், அருளையும், மன்னிப்பையும் கிருபையையும் சுகத்தையும், ஈடேற்றத்தையும் வேண்டுகிறேன். நிச்சயமாக அல்லாஹ்வைத்தவிர உண்மையாக வணங்கப்பட தகுதியானவர் வேறு எவருமில்லை என உள்ள உறுதியுடன் மொழிகிறேன். இறைவா! உன்னிடம் மன்னிப்புக் கோருகிறேன். உன்னிடம் சுவனத்தை வேண்டுகிறேன். உன்னைக் கொண்டு நரகத்தை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.

**9. புனித லைலத்துல் கத்ர் இரவில் ஓதும் துஆக்கள்.**

1.

أَسْتَغْفِرُ اللّٰهَ الْعَظِيْمَ مِنْ كُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ.

மகத்தான அல்லாஹ்விடம் அனைத்து பாவங்களை விட்டும் மன்னிப்புத் தேடுகிறேன். அவனிடம் தவ்பா செய்கிறேன். (என்று இரவு முழுவதும் மன்னிப்பு கோர வேண்டும்)

உ.

اَللّٰهُمَّ اِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ فَاعْفُ عَنِّيْ

யா அல்லாஹ்! நிச்சயமாக நீ மன்னிப்பவனாகவும், மன்னிக்க விரும்புபவனாகவும் இருக்கிறாய். எனவே என்னை மன்னித் தருள்வாயாக!

3. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இயன்ற அளவு ஸலவாத் ஓதுவது.

4. இயன்ற அளவு குர்ஆன், திக்ரு, தஸ்பீஹ் முதலியன இரவு முழுவதும் ஓதுவது.

## ஐங்காலத் தொழுகைகளுக்கு பின் ஓதும் துஆக்கள்.

### 1. ஸுபுஹுடையது ஆ.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ، اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ وَبَارِكْ وَسَلِّمْ عَلَيْهِ ،

اَللّٰهُمَّ اِنَّا اَصْبَحْنَا مِنْكَ فِيْ نِعْمَةٍ وَّعَافِيَةٍ وَّسِتْرٍ فَاَتِمَّ نِعْمَتَكَ عَلَيْنَا وَعَافِيَتَكَ وَسِتْرَكَ فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ ، اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ،

எல்லாப் புகழும் உலகத்தாரை படைதது காக்கும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக! இறைவா! எங்கள் தலைவர் முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தார்கள் மீதும் கருணையும் ஈடேற்றமும் பரக்கத்தும் சொரிவாயாக!

இறைவா! நிச்சயமாக நாங்கள் உன்னில் நின்றும் உண்டான அருளிலும், சுகத்திலும், பாவத்தை அழிப்பதிலும் காலையில் ஆகிவிட்டோம். மார்க்கத்திலும், இம்மையிலும், மறுமையிலும், எங்கள் மீது உனது அருளையும், உனது சுகத்தையும், உனது பாவ அழிப்பையும் பூர்த்தி செய்வாயாக! நிச்சயமாக நீ எல்லா விஷயங்கள் மீதும் ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றாய்.

اَللّٰهُمَّ اجْعَلْ اَوَّلَ يَوْمِنَا هٰذَا لَنَا صَلَاحًا وَّاَوْسَطَهُ
فَلَاحًا وَّاٰخِرَهُ نَجَاحًا وَّرَبَاحًا ، اَللّٰهُمَّ صَبِّحْنَا مِنْكَ
صَبَاحَ الرِّضٰى وَاكْفِنَا شَرَّ مَا فِى الْقَضَا ، وَلَا تُعَذِّبْنَا
بِالْجَرَآئِمِ يَا كَرِيْمُ يَا رَحِيْمُ يَا اَللّٰهُ ،

இறைவா! இந்நாளின் ஆரம்பத்தை சீராகவும், அதன் நடுப்பகுதியை வெற்றியாகவும், இதன் இறுதியை ஈடேற்றமாகவும், இலாபகரமாகவும் ஆக்கிவைப்பாயாக!

இறைவா! உன்னில் நின்றும் திருப்தி உடைய காலையாக எங்களை காலையில் ஆக்கி வைப்பாயாக! உனது தீர்ப்பிலே உள்ள விஷயங்களின் தீமையை எங்களுக்கு போதுமாக்கி வைப்பாயாக! சங்கையானவனே! இரக்கமுள்ளவனே! அல்லாஹ்வே! குற்றங்களினால் எங்களை வேதனைப்படுத்தி விடாதே!

اَللّٰهُمَّ اجْعَلْ صَبَاحَنَا صَبَاحَ الصَّالِحِيْنَ وَمَسَآئَنَا
مَسَآءَ الذَّاكِرِيْنَ وَقُلُوْبَنَا قُلُوْبَ الْخَاشِعِيْنَ ، وَاَبْدَانَنَا
اَبْدَانَ الْمُطِيْعِيْنَ وَاَعْمَالَنَا اَعْمَالَ الْمُتَّقِيْنَ وَاَلْسِنَتَنَا
اَلْسِنَةَ الذَّاكِرِيْنَ ، وَنَبِّهْنَا عَنْ نَوْمَةِ الْغَافِلِيْنَ
وَشَارِكْنَا فِيْ دُعَاءِ الصَّالِحِيْنَ وَارْزُقْنَا الْجَنَّةَ
وَلِقَاءَكَ يَا رَبَّ الْعَالَمِيْنَ ،

இறைவா! நல்லோர்களின் காலையாக எங்களுடைய காலையை ஆக்குவாயாக! எங்களுடைய மாலையை உன்னை நினைப்பவருடைய மாலையாக ஆக்குவாயாக! எங்களுடைய உள்ளங்களை உன்னை அஞ்சிய நல்லடியார்களின் உள்ளங்களாக ஆக்குவாயாக! எங்களுடைய உடல்களை உன்னை வழிப்படக்கூடியவர்களின் உடல்களாக ஆக்குவாயாக! எங்களுடைய அமல்களை உன்னை அஞ்சி நடக்கக் கூடிய நல்லடியார்களின் அமல்களாக ஆக்குவாயாக! உன்னை மறந்தவர்களுடைய தூக்கத்தை விட்டும் எங்களை உணர்ச்சியூட்டுவாயாக! எங்களை நல்லோர்களுடைய துஆவில் இணைப்பாயாக! உலகத்தாரை படைத்து பரிபாலிப்பவனே! எங்களுக்கு சுவனத்தையும் உன்னுடைய திரு சந்திப்பையும் அருள்வாயாக!

اَللّٰهُمَّ رَبَّنَا لَا تَقْتُلْنَا بِغَضَبِكَ وَلَا تُهْلِكْنَا بِعَذَابِكَ
وَعَافِنَا قَبْلَ ذٰلِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ، اَللّٰهُمَّ اَجِرْنَا
مِنَ النَّارِ بِ سَالِمِيْنَ وَاَدْخِلْنَا الْجَنَّةَ بِسَلَامٍ اٰمِنِيْنَ
وَقِنَا رَبَّنَا شَرَّ الظَّالِمِيْنَ وَشَرَّ الْحَاسِدِيْنَ وَشَرَّ
الْمُنَافِقِيْنَ وَشَرَّ الْمَاكِرِيْنَ وَشَرَّ الْخَلَائِقِ كُلِّهِمْ
اَجْمَعِيْنَ فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكَافِرِيْنَ ،

யா அல்லாஹ்! எங்கள் இரட்சகா! உனது கோபத்தினால் எங்களை கொலை செய்து விடாதே! உன்னுடைய வேதனையினால் எங்களை அழித்து விடாதே! கிருபையாளர்களுக்கெல்லாம் மிகுந்த கிருபையாளனே! அதற்கு முன்னால் எங்களுக்கு சுகத்தையளிப்பாயாக!

இறைவா! எங்களை நரகத்தை விட்டும் விடுதலை யளிப்பாயாக! ஈடேற்றமுடனே அச்சம் தீர்ந்தவர்களாக எங்களை சுவனத்தில் நுழைய வைப்பாயாக! எங்கள் இரட்சகா! அநியாயக்காரர்களின் தீங்கை விட்டும் இன்னும் பொறாமைக்காரர்களின் தீங்கை விட்டும் நயவஞ்சர்களின் தீங்கை விட்டும் இன்னும் சூழ்ச்சி செய்பவர்களின் தீங்கை விட்டும் எங்களை அனைத்து படைப்பினங்களின் தீங்கை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! காபிர்களுக்கு பாதகமாக எங்களுக்கு உதவி செய்வாயாக!

إِلٰهَنَا وَارْزُقْنَا النَّظَرَ إِلَىٰ لِقَاءِ وَجْهِكَ الْكَرِيْمِ مَعَ
لِقَاءِ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَآلِهِ
وَصَحْبِهِ أَجْمَعِيْنَ ،

எங்கள் இறைவா! மேலும் எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் திருசந்திப்புடனே சங்கையான உனது சந்திப்பின் பார்வையை எங்களுக்கு அருள்வாயாக !

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَّفِي الْآخِرَةِ حَسَنَةً
وَّقِنَا عَذَابَ النَّارِ ، رَبَّنَا اغْفِرْ لَنَا وَلِوَالِدِيْنَا وَلِمَشَائِخِنَا
وَلِأَسَاتِيْذِنَا وَلِأَحْبَابِنَا وَلِجَمِيْعِ أُمَّةِ مُحَمَّدٍ صلى الله عليه وسلم

எங்கள் இறைவா! இம்மையிலும் மறுமையிலும் நற்பெயரை அளிப்பாயாக! நரகத்தின் வேதனையை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக!

எங்கள் இரட்சகா! எங்களுக்கும் எங்கள் பெற்றோர்களுக்கும் எங்களுடைய ஷெய்குமார்களுக்கும் எங்களுடைய ஆசிரிய தந்தைமார்களுக்கும் எங்களுக்கு பிரியமானவர்களுக்கும் முஹம்மது (ஸல்) உம்மத்துமார்கள் அனைவர்களுக்கும் நீ மன்னிப்பளிப்பாயாக!

رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِيْ صَغِيْرًا وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ' اٰمِيْنَ ، سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ،

எங்கள் இரட்சகா! நாங்கள் சிறு வயதாகயிருக்கும் போது எங்கள் பெற்றோர்கள் எங்களை கிருபையுடன் பரிபாலித்ததைப் போன்று அவர்களுக்கு கிருபை செய்வாயாக! எங்கள் தலைவர் முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தார்கள் மீதும் அவர்கள் தோழர்கள் அனைவர் மீதும் உன்னுடைய கிருபையையும் கருணையையும் பொழிவாயாக! ஆமீன்.

## 2. ழுஹருடைய துஆ

اَللّٰهُمَّ اكْتُبْ لِكُلِّ وَاحِدٍ مِّنَّا بَرَآءَةً مِّنَ النَّارِ وَاَمَانًا مِّنَ الْعَذَابِ وَخَلَاصًا مِّنَ الْحِسَابِ ،

وَجَوَازًا عَلَى الصِّرَاطِ وَنَصِيبًا مِّنَ الْجَنَّةِ وَالْفَوْزَ
بِالْجَنَّةِ وَالنَّجَاةَ مِنَ النَّارِ وَالْعَفْوَ عِنْدَ الْحِسَابِ،
اَللّٰهُمَّ اَحْسِنْ عَاقِبَتَنَا فِى الْاُمُوْرِ كُلِّهَا وَاَجِرْنَا
مِنْ خِزْيِ الدُّنْيَا وَعَذَابِ الْاٰخِرَةِ تَوَفَّنَا
مُسْلِمِيْنَ وَاَلْحِقْنَا بِالصَّالِحِيْنَ ،

இறைவா! எங்களில் ஒவ்வொருவருக்கும் நரக விடுதலையையும், வேதனையை விட்டும் அச்சம் தீர்வதையும், கேள்வி கணக்கை விட்டும் ஈடேற்றம் பெறுவதையும், பாலத்தின் மீது கடப்பதையும், சொர்க்கத்தில் நின்றும் உண்டான பங்கையும், சுவனத்தைக் கொண்டு வெற்றியையும், கேள்வி கணக்கின்போது ஈடேற்றத்தையும், கேள்வி கணக்கின்போது மன்னிப்பையும் விதிப்பாயாக!

இறைவா! எங்களின் எல்லாக் காரியங்களிலும் இறுதி முடிவை நல்லதாக்குவாயாக! இம்மையின் இழிவை விட்டும் மறுமையின் வேதனையை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக! எங்களை முஸ்லிம்களாக மரணிக்கச் செய்து நல்லோர்களுடன் எங்களை சேர்த்து வைப்பாயாக!

### 3. அஸருடைய துஆ

اَللّٰهُمَّ اِنَّا نَسْئَلُكَ سَلَامَةً فِى الدُّنْيَا وَعَافِيَةً
فِى الْجَسَدِ وَزِيَادَةً فِى الْعِلْمِ وَالْهُدٰى، وَبَرَكَةً
فِى الرِّزْقِ وَصِحَّةً فِى الْعَقْلِ اِلٰهَنَا تَوْبَةً قَبْلَ الْمَوْتِ
وَرَاحَةً عِنْدَ الْمَوْتِ وَمَغْفِرَةً بَعْدَ الْمَوْتِ ،

يَا سَامِعَ كُلِّ صَوْتٍ هَوِّنْ عَلَيْنَا سَكَرَاتِ الْمَوْتِ
وَارْحَمْنَا عِنْدَ الْمَوْتِ ، اَللّٰهُمَّ اجْعَلْ اٰخِرَ
كَلَامِنَا بِقَوْلِ لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ
عِنْدَ الْمَوْتِ ، رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا
وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ ،

இறைவா! இம்மையில் ஈடேற்றத்தையும் உடலில் ஆரோக்கியத்தையும் கல்வியிலும் நேர்வழியிலும் வளர்ச்சியையும் இரணத்தில் அபிவிருத்தியையும் அறிவில் தெளிவையும் உன்னிடம் நாங்கள் கேட்கிறோம்.

எங்கள் இறைவா! மரணத்திற்கு முன்பு தவ்பாவையும், மௌத்தாகும் பொழுது சுகத்தையும், மௌத்துக்கு பின்பு மன்னிப்பையும் நாங்கள் கேட்கிறோம். எல்லா சப்தத்தையும் கேட்கக் கூடியவனே! எங்கள் மீது மரண வேதனையை இலேசாக்கு ! மரணமாகும் பொழுது எங்களுக்கு கிருபை செய்வாயாக! இறைவா! லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற திருக்கலிமாவை எங்களுடைய இறுதி பேச்சாக ஆக்குவாயாக !

4. மக்ரிபுடைய துஆ

اَللّٰهُمَّ اِنَّا اَمْسَيْنَا مِنْكَ فِيْ نِعْمَةٍ وَّعَافِيَةٍ
وَّسِتْرٍ ، فَاَتِمَّ عَلَيْنَا نِعْمَتَكَ وَعَافِيَتَكَ
وَسِتْرَكَ فِي الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ اِنَّكَ
عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ، رَبَّنَا لَا تَجْعَلْ فِيْنَا
شَقِيًّا وَّلَا مَحْرُوْمًا ، اَللّٰهُمَّ اَجِرْنَا مِنَ النَّارِ

سَالِمِيْنَ وَاَدْخِلْنَا الْجَنَّةَ بِسَلَامٍ اٰمِنِيْنَ وَقِنَا
رَبَّنَا شَرَّ الظّٰالِمِيْنَ فَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِيْنَ
اِلٰهَنَا وَارْزُقْنَا النَّظَرَ اِلٰى لِقَاۤءِ وَجْهِكَ الْكَرِيْمِ
مَعَ لِقَاۤءِ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ وَاٰلِهٖ
وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ۝

இறைவா ! நிச்சயமாக நாங்கள் உன்னில் நின்றும் உண்டான அருளிலும், சுகத்திலும், (பாவத்தை) அழிப்பதிலும் மாலையில் ஆகிவிட்டோம். மார்க்கத்திலும் இம்மையிலும் மறுமையிலும் எங்கள் மீது உனது அருளையும் உனது சுகத்தையும் உனது (பாவ) அழிப்பையும் பூர்த்தி செய்வாயாக! நிச்சயமாக நீ எல்லா விஷயங்கள் மீதும் ஆற்றல் பெற்றவனாக இருக்கிறாய். இறைவா ! எங்களை மார்க்கத்தில் தடுக்கப்பட்டவர்களாகவும் மூதேவியாகவும் ஆக்கிவிடாதே !

இறைவா! எங்களை நரகத்தைவிட்டும் விடுதலையளிப்பாயாக! ஈடேற்றமுடனே அச்சம் தீர்ந்தவர்களாக எங்களை சுவனத்தில் நுழைய வைப்பாயாக! எங்கள் இரட்சகா அநியாயக்காரர்களின் தீங்கைவிட்டும் இன்னும் சூழ்ச்சி செய்பவர்களின் தீங்கை விட்டும் அனைத்து படைப்பினங்களின் தீங்கைவிட்டும் எங்களை பாதுகாப்பாயாக! காபிர்களுக்கு பாதகமாக எங்களுக்கு உதவி செய்வாயாக!

எங்கள் இறைவா, எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் திரு சந்திப்புடனே சங்கையான உனது சந்திப்பின் பார்வையை எங்களுக்கு அருள்வாயாக!

5. இஷாவுடைய துஆ

اَللّٰهُمَّ احْفَظْنَا فِيْ ظُلْمَةِ اللَّيْلِ كَمَا حَفِظْتَنَا فِيْ ضَوْءِ
النَّهَارِ ، وَاصْرِفْ عَنَّا بَلَاءَ اللَّيْلِ كَمَا صَرَفْتَ عَنَّا
بَلَاءَ النَّهَارِ ، وَاحْشُرْنَا مَعَ الْاَبْرَارِ وَاجْعَلْ مُنْقَلَبَنَا
اِلٰى دَارِ الْقَرَارِ ، وَنَجِّنَا مِنَ النَّارِ وَاعْفُ عَنَّا الْاَوْزَارِ
يَا غَفَّارُ يَا رَحِيْمُ يَا سَتَّارُ يَا عَلَّامَ الْغُيُوْبِ ، اَللّٰهُمَّ
احْفَظْنَا يَا فَيَّاضُ مِنْ جَمِيْعِ الْبَلَايَا وَالْمُصِيْبَاتِ
وَالْاَعْدَاءِ وَالْاَمْرَاضِ ،

-இறைவா! பகல் வெளிச்சத்தில் எங்களை பாதுகாத்ததைப் போன்று இரவின் இருளிலும் பாதுகாப்பாயாக! பகலின் சோதனையை எங்களை விட்டும் மாற்றியதை போன்று இரவின் சோதனையை எங்களைவிட்டும் மாற்றுவாயாக! (மறுமையில்) நல்லோர்களுடன் எங்களை எழுப்புவாயாக! எங்களுடைய இடப்பெயர்ச்சியை நிரந்தர வீட்டின் பக்கம் ஆக்குவாயாக ! நரகத்தை விட்டும் எங்களை ஈடேற்றம் பெறச் செய்வாயாக !எங்களை விட்டும் குற்றங்களை அழிப்பாயாக! மன்னிப்பாளனே! கிருபையாளனே! குறைகளை மறைப்பவனே! மறைவானவைகளை மிக அறிபவனே! கிருபைகளை சொரிபவனே! எங்களை துன்பங்கள் சோதனைகள் பகைவர்கள் நோய்கள் ஆகியவைகளை விட்டும் பாதுகாப்பாயாக!

தறாவீஹ் தொழுகையின் துஆ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ، اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ ،

எல்லாப்புகழும் உலகத்தாரின் இரட்சனாகிய அல்லாஹ்வுக்கே உரித்தாகுக! இறைவா! எங்கள் தலைவர் முஹம்மது(ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் குடும்பத்தார், தோழர்கள் அனைவர் மீதும் கருணையும் சாந்தியும் சொரிவாயாக!

اَللّٰهُمَّ اجْعَلْنَا بِالْاِيْمَانِ كَامِلِيْنَ ، وَلِفَرَائِضِكَ
مُؤَدِّيْنَ ، وَلِلصَّلٰوةِ حَافِظِيْنَ ، وَلِلزَّكٰوةِ فَاعِلِيْنَ ،

இறைவா! எங்களை பரிபூரண ஈமான் கொண்டவர்களாகவும், (எங்களுக்குரிய) கடமைகளை நிறைவேற்றியவர்களாகவும், ஐங்காலத் தொழுகையை பேணக் கூடியவர்களாகவும், ஏழைவரியெனும் ஜகாத்தை நிறைவேற்றக்கூடியவர்களாகவும் ஆக்கி வைப்பாயாக!

وَلِمَا عِنْدَكَ طَالِبِيْنَ ، وَلِعَفْوِكَ رَاجِيْنَ ،
وَبِالْهُدٰى مُتَمَسِّكِيْنَ ، وَعَنِ اللَّغْوِ مُعْرِضِيْنَ ،

உன்னிடத்திலுள்ள அருளை தேடக்கூடியவர்களாகவும், உனது மன்னிப்பை ஆசிப்பவர்களாகவும், நேர் வழியை பற்றிப் பிடிக்க கூடியவர்களாகவும், வீணானவைகளை புறக்கணிக்க கூடியவர்களாகவும், ஆக்கி வைப்பாயாக!

وَفِي الدُّنْيَا زَاهِدِيْنَ ، وَفِي الْاٰخِرَةِ رَاغِبِيْنَ ، وَبِالْقَضَآءِ رَاضِيْنَ ، وَلِلنَّعْمَآءِ شَاكِرِيْنَ ، وَعَلَى الْبَلَآءِ صَابِرِيْنَ ،

இவ்வுலகில் பற்றற்றவர்களாகவும், மறுமையை ஆசை வைக்கக்கூடியவர்களாகவும், உனது தீர்ப்பை பொருந்தக்கூடியவர்களாகவும், உனது அருள்களுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும், உனது சோதனைகளை பொறுத்துக்கொள்பவர்களாகவும் ஆக்கி வைப்பாயாக!

وَتَحْتَ لِوَآءِ حَبِيْبِكَ وَنَبِيِّكَ وَصَفِيِّكَ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ يَوْمَ الْقِيَامَةِ لَائِذِيْنَ ،

உனது நேசரும் நபியும் உன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவருமாகிய எங்கள் தலைவர் முஹம்மது (ஸல்) அவர்களின் "லிவாவுல் ஹம்து" என்ற கொடி நிழலின் கீழ் மறுமை நாளில் வரக்கூடியவர்களாக எங்களை ஆக்கி வைப்பாயாக!

وَاِلَى الْحَوْضِ وَارِدِيْنَ ، وَمِنْ سُنْدُسٍ وَاِسْتَبْرَقٍ مُتَلَابِسِيْنَ ، وَمِنْ حُوْرٍ عِيْنٍ مُتَزَوِّجِيْنَ ،

நாயகம் (ஸல்) அவர்களின் 'ஹவ்லுல் கவ்தர்' என்ற தடாகத்தில் வரக்கூடியவர்களாகவும் (ஸுன்துஸ்) 'இஸ்தப்ரக்' என்ற சுவனத்தின் ஆடைகளை அணிபவர்களாகவும்,

'ஹூருல் ஈன்' என்ற சுவனத்து மாதர்களை மணமுடிப்பவர்களாகவும் ஆக்கிவைப்பாயாக!

وَمِنْ طَعَامِ الْجَنَّةِ اٰكِلِيْنَ ، وَمِنْ لَبَنٍ وَعَسَلٍ
مُصَفًّى شَارِبِيْنَ ، بِاَكْوَابٍ وَاَبَارِيْقَ وَكَأْسٍ
مِّنْ مَّعِيْنٍ مَعَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ مِنَ
النَّبِيِّيْنَ وَالصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ

சுவனத்தின் உணவுகளை உண்பவர்களாகவும், சுவனத்து உதவியாளர்களிடமிருந்து கெண்டிகளிலும், குவளைகளிலும் கோப்பைகளிலும், தெளிவான தேனை அருந்துபவர்களாகவும் ஆக்குவாயாக! நீ அருள்பாலித்த நபிமார்கள், ஸித்தீக்கீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோருடன் ஆக்குவாயாக!

اَللّٰهُمَّ اجْعَلْنَا فِىْ هٰذَا الشَّهْرِ الشَّرِيْفِ مِنَ السُّعَدَآءِ
الْمَقْبُوْلِيْنَ ، وَلَا تَجْعَلْنَا يَا اَللّٰهُ يَا اَللّٰهُ يَا اَللّٰهُ
مِنَ الْاَشْقِيَآءِ الْمَطْرُوْدِيْنَ ،

இறைவா! சிறப்பான இம்மாதத்தில் உன்னிடம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சீதேவிகளில் என்னை ஆக்குவாயாக! யாஅல்லாஹ்! உன்னால் விரட்டப்படுகின்ற மூதேவிகளில் எங்களை ஆக்கிவிடாதே!

اَللّٰهُمَّ وَاِنَّ لَكَ فِيْ كُلِّ لَيْلَةٍ مِّنْ لَيَالِيْ شَهْرِ رَمَضَانَ
عُتَقَاءَ وَطُلَقَاءَ وَاُمَنَاءَ وَخُلَصَاءَ فَاجْعَلْنَا يَا اِلٰهَنَا
مِنْ عُتَقَائِكَ وَطُلَقَائِكَ وَاُمَنَائِكَ وَخُلَصَائِكَ
مِنَ النَّارِ وَالْعَفْوِ عِنْدَ الْحِسَابِ

இறைவா! ரமலான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் உன்னால் நரகத்தை விட்டும் உரிமை விடப்படக்கூடியவர்களும் விடுதலை செய்யப்படக் கூடியவர்களும் அச்சம் தீரக்கூடியவர்களும், ஈடேற்றம் பெறக்கூடியவர்களும் இருக்கின்றார்கள் எனவே, எங்கள் இறைவா! உன்னால் நரகத்தை விட்டும் விடுதலை செய்யப்படக்கூடியவர்களாகவும், உரிமை விடப்படக்கூடியவர்களாகவும், ஈடேற்றம் பெறக்கூடியவர்களாகவும் ஆக்கிவைப்பாயாக! கேள்வி கணக்கின்போது மன்னிப்பையும் அளிப்பாயாக!

رَبَّنَا تَقَبَّلْ دُعَاءَنَا اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ ،
وَتُبْ عَلَيْنَا اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ ،

எங்கள் இரட்சகா! எங்கள்து ஆக்களை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ யாவற்றையும் கேட்பவனும் அறிபவனுமாயிருக்கிறாய். எங்கள் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ தவ்பாவை ஏற்றுக் கொள்ளும் கிருபையாளனாக இருக்கிறாய்.

وَصَلَّى اللّٰهُ وَسَلَّمَ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ
